**சார்பு நீதிமன்றம், திருமயம்.**
**முன்னிலை – திரு. M. தயாளன், M.L.,**
**சார்பு நீதிபதி, திருமயம்.**
**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 14 ம் தேதி செவ்வாய்க்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 30 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண் – 11/2024**
**(CNR.No. TNPD190000582024)**

1. AL.முத்தாத்தாள்
2. பாண்டிமீனாள்
3. அமுதராணி ...வாதிகள்

//எதிர்//

1. வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருமயம்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருமயம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.

4. C. நேரு ...பிரதிவாதிகள்

(As per Order in I.A.No.398/2024 dated 12.09.2024)

இவ்வழக்கானது கடந்த 20.04.2017 அன்று புதுக்கோட்டை, முதன்மை சார்பு நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி, 06.04.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 30.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்து, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ராஜாக்கிளி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ம்பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 ம்பிரதிவாதி அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இரு

M DAYALAN
Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:19:01 +0300

தரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தில் 1, 2ம் பிரதிவாதிகளோ, அல்லது அவர்களது சார்நிலை அலுவலர்களோ மண்சாலை அமைக்கும் விதத்திலோ அல்லது வேறு வகையிலோ எவ்வித இடையூறும் செய்யக்ககூடாது என 1, 2ம்பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் செலவுத் தொகையுடன் வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 1–ன் கீழ் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :–**

வழக்கு சொத்து புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, ஊனையூர் வருவாய் கிராமம், புல எண்.180/3 மொத்த விஸ்தீர்ணம் 73 செண்ட் நஞ்சை நிலம் C.PL.லெட்சுமணன் மகன்கள் பழனியப்பன், ராமசாமி, சுப்பிரமணியன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். அவர்களுக்குள் 09.11.1972ல் நடந்த பாகப்பிரிவினைப்படி வழக்கு சொத்து உள்பட அவர்களது குடும்ப சொத்துக்கள் பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது. அதில் வழக்குச் சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தான 73 செண்ட் நிலத்தில் வடபுற பகுதியில் 36.1/2 செண்ட் நிலம் பழனியப்ப செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்து பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் "A" அட்டவணை சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. வழக்குச் சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தான 73 செண்ட் நிலத்தில் தென்புற பகுதி 36.1/2 செண்ட் ராமசாமி செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்து பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் "B" அட்டவணை சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 09.12.1972ல் 1ம்வாதியின் மாமியாரும், 2 மற்றும் 3ம்வாதிகளின் தந்தைவழி பாட்டியுமான அழகம்மை அம்மாள் என்பவர் வழக்குச் சொத்தினை முன்உரிமையாளர்களான பழனியப்பன் மற்றும் ராமசாமி ஆகிய இருவரிடம் இருந்தும் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். அவரது இறப்பிற்கு பின்னர் அவரது மகன்களான 2, 3 வாதிகளின் தகப்பனார் அழகுசாமி என்பவரும், மற்றும் சின்னையா என்பவரும் மேற்கண்ட சொத்தை அடைந்து அதில் கிழக்குப்பகுதி 36.1/2 செண்ட் நிலமான வழக்கு சொத்து 2, 3 வாதிகளின் தகப்பனாரான அழகுசாமிக்கும், மேற்குபகுதி 36.1/2 செண்ட் நிலம்

M DAYALAN
Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:19:28 +0300

சின்னையா என்பவருக்கும் ஒதுக்கப்பட்டது. 2, 3 வாதிகளின் தகப்பனாரான அழகுசாமி இறந்தபின்னர் வாதிகள் அவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கு சொத்தில் சுவாதீனம் அடைந்து தொடர்ந்து அனுபவம் செய்து வருகின்றனர். 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. 1, 2 பிரதிவாதிகள் வாதிகளிடமிருந்து நில எடுப்பு சட்டப்படி எவ்வித நிலத்தையும் கைப்பற்றவில்லை. எனவே 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் மண் ரோடு அமைப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை. வழக்கு சொத்துக்குரிய பட்டா அழகம்மை பெயரிலேயே உள்ளது. கீழ்புற பகுதியில் மண்சாலை அமைப்பதற்கு முற்பட்டதை வாதிகள் தடுத்துவிட்டனர். 1, 2 பிரதிவாதிகள் அரசு அலுவலர்கள் என்பதால் எந்நேரத்திலும் மண்சாலை அமைப்பதற்கு முயற்சி செய்வார்கள். எனவே வழக்கு சொத்தில் 1, 2ம் பிரதிவாதிகளோ, அல்லது அவர்களது சார்நிலை அலுவலர்களோ மண்சாலை அமைக்கும் விதத்திலோ அல்லது வேறு வகையிலோ எவ்வித இடையூறும் செய்யக்ககூடாது என 1, 2ம்பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் 4ம்பிரதிவாதி வழக்கு சொத்தில் இடையூறு செய்து அரசு அலுவலர்களை மண்சாலை அமைக்க வற்புறுத்தி வந்ததால் அவர் இவ்வழக்கில் 4ம்பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். தாவாப்படி தீர்ப்பாக பணிந்து பிரார்த்திக்கப்படுகிறது.

3) <u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1 மற்றும் 3ம்பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>

தாவா சொத்து திருமயம் தாலுகா, ஊனையூர் கிராமம், புல எண்.180/3ல் கீழ்புறம் உள்ள 36.5 செண்ட் நிலம் வாதிகளுக்கு சொந்தமானது என்பது பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வழக்கு சொத்தில் எக்காலத்திலும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வழக்கு சொத்திலுள்ள கீழ்புற பகுதியில் மண்சாலை அமைப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. திருமயம் பஞ்சாயத்து யூனியன் வழக்கு சொத்தில் மண்சாலை அமைப்பதற்கு எவ்வித பண ஒதுக்கீடும் செய்யவில்லை. ஊனையூர் கிராமத்தினர் கோவிலை சென்றடைவதற்கு புதிய மண்சாலை அமைக்க வேண்டும் என்று எடுத்துரைத்தன்பேரில் யூனியன் அதிகாரிகள் வழக்கு சொத்தை பார்வையிட்டபோது வாதிகள் ஆட்சேபணை செய்தார்கள். ஆகவே பிரதிவாதிகள்

M DAYALAN
Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:20:06 +0300

எவ்வித மண்சாலையும் வழக்கு சொத்தில் அமைக்கவில்லை. வழக்குமூலம் தவறானது.

4. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

01. வாதிகள் கோரியுள்ளவாறு வாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர தடையாணை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

02. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

5. வாதிகள் தரப்பில் சாட்சி வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>வழக்கெழுவினா 1–ற்கான தீர்வு :–</u>

6.1) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, ஊனையூர் வட்டம் ஊனையூர் கிராமம், புல எண்.180/3–ல் மொத்தமுள்ள 73 செண்ட் நிலத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள 36–1/2 செண்ட் நிலம் வாதிகளுக்கு பாத்தியம் என்றும், அதில் பிரதிவாதிகள் எந்த இடையூறும் ஏற்படத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து உள்ளிட்ட மொத்தமுள்ள 73 செண்ட் நிலம் ஆதியில் C.PL.லெட்சுமணன் என்பவரின் வாரிசுகளான பழனியப்ப செட்டியார், ராமசாமி செட்டியார் ஆகியோரிடையே நடைபெற்ற பாகப்பிரிவினையில் வடக்கு பக்கமுள்ள 36.1/2 செண்ட் நிலம் பழனியப்ப செட்டியாருக்கும், தெற்கு பக்கமுள்ள 36.1/2 செண்ட் நிலம் ராமசாமி செட்டியாருக்கும் ஒதுக்கப்பட்டது என்று வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. வாதிகளின் அந்த கூற்றினை நிரூபணம் செய்யும் விதமாக வா.சா.ஆ.2 09.11.1972 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்சொன்ன பழனியப்ப செட்டியார் மற்றும் ராமசாமி செட்டியார் ஆகியோரிடையே சர்வே எண்.180/3–ல் தலா 36.1/2 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம்வாதியின் மாமியார் அழகம்மை அம்மாள் என்பவர் மேற்சொன்ன ராமசாமி

M DAYALAN
Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:20:20 +0300

மற்றும் பழனியப்பன் ஆகியோரிடம் இருந்து வழக்கு சொத்தினை கிரையம் பெற்று அவருடைய காலத்திற்கு பிறகு அவருடைய 2 மகன்கள் அழகுசாமி மற்றும் சின்னையா ஆகியோர் தனித்தனியே 36.1/2 செண்ட் நிலங்களை அனுபவித்து வந்தார்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன வாதிகளின் கூற்றினை நிரூபணம் செய்யும் விதமாக வா.சா.ஆ.1 09.12.1972 தேதியிட்ட கிரைய ஆவணம் காணப்படுகிறது. அந்த கிரைய ஆவணத்தை கவனமுடன் பரிசீலனை செய்கையில் புல எண்.180/3–ல் 73 செண்டினை அழகம்மை அம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்பது தெளிவாக தெரிகிறது. மேலும் வா.சா.ஆ.3 தீர்வை ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களின் மூலம் அழகம்மை மற்றும் அவருடைய வாரிசுகள் வழக்கு சொத்தினை ஆண்டு அனுபவித்து வந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

6.2) இந்த நிலையில், 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்டப்படியான நில ஆர்ஜித நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமல், 4ம்பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் வழக்கு சொத்தில் மண்சாலை அமைக்க முயற்சிக்கிறார்கள் என்றும் அதற்கு தடையாணை கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஊனையூர் கிராமவாசிகள் கோவிலுக்கு செல்வதற்கு மண்சாலை வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள் என்றும் அதனையொட்டி பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் ஸ்தல ஆய்வை மேற்கொண்டபோது வழக்கு சொத்தில் மண்சாலை அமைப்பதற்கு வாதிகள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்றும் எனவே 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் புதிய சாலை எதுவும் அமைக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2வது பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 1 மற்றும் 3ம்பிரதிவாதி ஆகியோர் அனுசரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.3) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வாதிகள் வழக்கு சொத்தில் அமைதியான அனுபோகத்தில் இருந்து வருகிறார்கள் என்பது தெளிவாக தெரிய வருகிறது. கிராமவாசிகளின் கோரிக்கையின்படி கோவிலுக்கு செல்வதற்காக மண்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வழக்குச் சொத்தில் வாதிகளின் உரிமை மற்றும் அனுபோகம் குறித்து பிரதிவாதிகள் தரப்பில் எந்த சச்சரவும் எழுப்பப்படவில்லை. இந்நிலையில் தங்களின் அமைதியான அனுபோகத்தில்

M DAYALAN
Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:20:32 +0300

இடையூறு ஏற்படும் என்று அச்சம் கொண்டு வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது சரியானது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

6.4) மேற்கண்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பார்வையிடும்போது கிராமவாசிகளின் கோரிக்கையின் அடிப்படையில் மண்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பிலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால் வழக்கு சொத்தில் தங்களுடைய அமைதியான அனுபோகத்தில் இடையூறு ஏற்படும் என்று அச்சம் கொண்டு வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வாதிகளின் வழக்கானது முதல்நோக்கிலான வழக்காக (Primafacie case) அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. சட்டப்பூர்வமான நிலஎடுப்பு நடைமுறைகளை கையாளாமல் வழக்குச் சொத்தில் மண்சாலை அமைப்பது சட்டவிரோதமான செயல் என்பதால் வாதிகள் பரிகாரம் பெற அருகதை உடையவர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அந்த அடிப்படையில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது. அந்த வகையில் வழக்கெழு வினா.1 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**7. <u>வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு :–</u>**

வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் வேறு பரிகாரங்கள் வழங்க வேண்டிய அவசியமில்லை என்று வழக்கெழு வினா.2–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக, வாதிகளின் வழக்கு நீதியின் நலன் கருதி அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. வழக்கு சொத்தில் 1, 2ம் பிரதிவாதிகளோ, அல்லது அவர்களது சார்நிலை அலுவலர்களோ மண்சாலை அமைக்கும் விதத்திலோ அல்லது வேறு வகையிலோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என 1, 2ம்பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை இல்லை என தீர்மானிக்கப்படுகின்றது.**

M DAYALAN

Digitally signed by M DAYALAN
Date: 2026.07.14 13:20:46 +0300

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 14–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M DAYALAN Digitally signed by M DAYALAN Date: 2026.07.14 13:20:55 +0300

சார்பு நீதிபதி,
திருமயம்.

**வாதிகள் தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – பாண்டிமீனாள் (2ம்வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 – | 09.11.1972 | பாகப்பிரிவினை ஆவணம் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 2 – | 09.12.1972 | கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 – | -- | நில வரி ரசீதுகள் (எண்ணிக்கை–4) – அசல் |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

இல்லை

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

இல்லை

M DAYALAN Digitally signed by M DAYALAN Date: 2026.07.14 13:21:05 +0300

சார்பு நீதிபதி,
திருமயம்.